

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.06.2023) தலைமைச் செயலகத்தில் சட்டமன்றப் பேரவை மானிய கோரிக்கை மற்றும் பல்வேறு அரசு நிகழ்வுகளில் அறிவித்த சிறப்புத் திட்டங்கள், விளையாட்டுத்துறை மேம்பாட்டுத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுதல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க, சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் முன்னாள் பாரத பிரதமர் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச்சிலை அமைய உள்ள இடத்தினை நேற்று முன்தினம் (26.06.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### 2023 ஆம் ஆண்டு தேசிய சீனியர்

# மகளிர் கால்பந்து இறுதி போட்டிக்கு தமிழ்நாடு அணி தகுதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 28 -

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ள தமிழ்நாடு அணிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம், அம்ரிஸ்தரில் ஜூன் 12ஆம் தேதி முதல் இன்று வரை நடைபெறுகிறது. 26.06.2023 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அணி மற்றும் இரயில்வே அணிக்கு எதிரான அரையிறுதியில் தமிழ்நாடு அணியானது 31 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள தமிழ்நாடு அணியினைப் பாராட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்த அணியில் உள்ள 12 வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற முன்னாள் மாணவியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாடு சீனியர் பெண்கள் கால்பந்து அணி இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று (28.6.2023) நடைபெறவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மதுரை கருவனூர் கிராம சம்பவத்தில்

# எடப்பாடி பழனிசாமி உண்மைக்குப் புறம்பாக பேசுவதா?

## அமைச்சர் பி.மூர்த்தி கண்டனம்!

சென்னை, ஜூன் 28-

மதுரை மாவட்டம் கருவனூர் கிராமத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்து எடப்பாடி பழனிசாமி உண்மைக்கு புறம்பாக பேசியுள்ளார் என்றும், பத்திரப்பதிவுத்துறையில் காலியாக உள்ள 85 பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (26.06.2023) சென்னை நந்தனம், ஒருங்கிணைந்த வணிக வரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், நிர்வாக மாவட்ட பதிவாளர்கள் நிர்வாகம், தணிக்கை மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை) மற்றும் தனி துணை ஆட்சியர்கள் (முத்திரை) பணி சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது .

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு அமைச்சர் மூர்த்தி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

பதிவு துறையின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்கியுள்ளார். அந்த வகையில் சார்பதிவாளர் அலுவலகத்தின் வருவாயை உயர்த்துவதற்கு எந்த வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மாவட்ட பதிவாளர் தணிக்கை மற்றும் துணை தலைவர்கள் உடன் இன்று ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் கட்டடங்களுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள பத்திரங்களை உடனுக்குடன் முடித்து வருவாய் ஈட்ட வேண்டும் என்று அறிவுரை வழங்கி உள்ளோம். பத்திரங்கள் பதியப்படும் போது பொதுமக்கள் அதிக நேரம் காத்திருக்காத வண்ணம் உடனுக்குடன் பத்திரங்களை பதிவு செய்யும் வகையில் 3.0 மென்பொருளை பயன்படுத்தி குறைபாடுகளை களைவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

தவறான செய்திகள் பரப்புவதை தடுக்கும் வகையிலும் நேர்மையான முறையில் பதிவு நடைபெறும் வகையிலும் இடைத்தரகர்கள் பத்திரப்பதிவு நடைபெறும் இடத்தில் இருக்க கூடாது என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

காலி பணியிடங்களை நிரப்பும் வகையில் பத்திரப்பதிவுத் துறையில் டி.என்.பி.எஸ்.சி. தேர்வு முறையில் காலி பணியிடங்கள் நிரப்பப் பட உள்ளது. பத்திரப்பதிவுத் துறையில் காலியாக உள்ள 85 பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பா.ஜ.க. எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன், அவருடைய மகன் நயினார் பாலாஜி மற்றும் பத்திரப் பதிவு, வருவாய் துறை அலுவலர் சேர்ந்து சென்னை ஆற்காடு சாலையில் உள்ள ரூ.100 கோடி மதிப்பிலான சொத்தை மோசடி பத்திரப் பதிவு செய்ததாக எழுந்துள்ள புகார் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது 15 நாட்களில் புகார் மீது அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரை மாவட்டம் கருவனூர் கிராமத்தில் நடைபெற்ற கைகலப்பு குறித்து பேசிய அமைச்சர், மதுரை மாவட்டம் கருவனூர் கிராமத்தில் ஏற்பட்ட சம்பவம் ஒரே சமூகத்தினர் இடையே பிரச்சினையால் ஏற்பட்ட மோதல். இச்சம்பவம் தொடர்பாக காவல்துறை அதிகாரிகள் பாகுபாடின்றி வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோவிலில் திருவிழா முடிந்த மறுநாள்தான் நான் அங்கு சென்றேன். நான் செல்லும்போது அங்கு எந்த பிரச்சினையும் இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி பேட்டியளித்தார்.

### சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் - முன்னாள் பிரதமர்

# வி.பி.சிங் சிலை நிறுவ ஆணையிட்ட முதல்வருக்கு நன்றி!

## சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 28-

முன்னாள் பாரத பிரதமர் வி.பி.சிங் சிலையினை சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நமது சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் சங்கத் தலைவர் ப.ஆறுமுகம் தலைமையில் பொருளாளர் கே. சீனிவாசன் முன்னிலையில் நிறுவ ஆணையிட்ட அச்சங்க செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

26.06.2023 மாலை 4 மணி அளவில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் கூடிய சங்கச் செயற்குழுவின் சிறப்புக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

20.04.23 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியாவின் பெருமை மிகு பிரதமர்களில் ஒருவரும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்விக்கும், வாழ்வுக்கும் வழிகாட்டிய மாமனிதர் வி.பி.சிங் அவர்களின் முழு உருவச்சிலை, தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நிறுவப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனை வரவேற்று நமது சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பாக அச்சிலையினை நமது மாநிலக் கல்லூரி வளாகத்தினுள் நிறுவ வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம்.

நமது தமிழக முதல்வர் அவர்கள், நமது கோரிக்கையினை ஏற்று, மாமனிதர் வி.பி.சிங் அவர்களின் முழு உருவச்சிலை நமது சென்னை மாநிலக் கல்லூரியில் நிறுவப்படும் என்று 25.06.2023 அன்று அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு நமது சங்கத்தின் கோரிக்கைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் என்பதில் நமது சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மனம் நெகிழ்ந்து நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



**நோ**ய் தீரக் கண்டுபிடிக்கப்பட்ட
கசப்பு மருந்து
தந்தை பெரியாரின்
வழி ;
அந்தக் கசப்பு
மருந்தினைத்
தேனில் குழைத்துத்
தந்து நோய் போக்க
முனைவது
அறிஞர் அண்ணாவின்
வழி!

**.....முத்தமிழறிஞர்**
**கலைஞர்....**

### இந்தியாவிலேயே முதன் முறையாக - புழல் மத்திய சிறையில்

# பெண் சிறைவாசிகளால் இயக்கப்படும் பெட்ரோல் பங்க்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி ஆய்வு செய்தார்!

சென்னை, ஜூன் 28-

இந்தியாவிலேயே முதல் முறையாக, பெண் கைதிகள் மட்டும் இயக்கும் பெட்ரோல் பங்க் சென்னை அருகே புழல் சிறை வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. இந்த பங்க்கை ஒரு மாதத்தில் திறப்பதற்குரிய நடவடிக்கையில் சிறைத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். தமிழக சிறைத் துறை, கைதிகளை நல்வழிப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கடந்த 2018ஆம் ஆண்டு கைதிகள் பெட்ரோல் பங்க், சென்னை புழலில் முதல் முறையாக திறக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து திருச்சி, வேலூர், கோவை உள்ளிட்ட 5 இடங்களிலும் சிறைத் துறை சார்பில் பெட்ரோல் பங்க்குகள் திறக்கப்பட்டன. இந்த பங்க்குகளை தற்போது ஆண் கைதிகள் இயக்கி வருகின்றனர். நன்னடத்தை கைதிகள் தேர்வு செய்யப்பட்டு, உரிய பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர், பெட்ரோல் பங்க்குகளில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பெட்ரோல் பங்க்கு மூலம் சுமார் 25 கைதிகள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். பெட்ரோல் பங்க் மூலம் சிறைத்துறைக்கு நல்ல வருவாய் கிடைப்பதுடன், கைதிகளும் சம்பாதித்து வருகின்றனர்.

இந்த திட்டத்தை மேலும் விரிவாக்கும் வகையில், புழல் சிறை வளாகத்தில் பெண்கள் தனிச்சிறை அருகே ரூ.1.92 கோடி மதிப்பில் 1,170 சதுர மீட்டர் பரப்பளவில் மற்றொரு பெட்ரோல் பங்க் கட்டப்பட்டு வருகிறது.

இந்த பெட்ரோல் பங்க்குகளை பெண் கைதிகள் மட்டுமே இயக்கவுள்ளனர். 'இந்தியாவிலேயே முதல் முறையாக பெண் கைதிகள் மட்டும் இயக்கக் கூடிய பெட்ரோல் பங்க் புழலில்தான் திறக்கப்படுகிறது.

இது ஒரு மாதத்தில் திறக்கப்படும்' என்று சிறைத் துறை டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி தெரிவித்தார். இந்த பெட்ரோல் பங்க்கின் ஒரு பகுதியில் கைதிகள் தயாரிக்கும் பொருள்களும் விற்பனை செய்யப்படும்.

பெட்ரோல் பங்க் கட்டுமானப் பணிகளை தமிழக சட்டம், நீதி, சிறைகள் சீர்திருத்தப் பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திங்கள் கிழமை ஆய்வு செய்தார்.

அவருடன் டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி, சிறைத் துறை டி.ஐ.ஜி.க்கள் இரா. கனகராஜ், ஆ.முருகேசன் ஆகியோர் இருந்தனர். பின்னர், அமைச்சர் எஸ். ரகுபதி, புழல் சிறை வளாகத்தில் நடைபெற்ற 'சிறைகளின் கலை' என்ற புதிய திட்ட தொடக்க விழாவில் பங்கேற்றார்.

இந்தத் திட்டத்தின்படி, கைதிகளுக்கு தியானம், யோகா, இசை, நாடகம், இலக்கியம், விளையாட்டு போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.






**வாட்ஸ் அப்பில் வலம் வருவது!**

